அந்தரங்கமானது

NEW


# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019

## 58- நாடகமும் அரங்கியலும்

### புதிய பாடத்திட்டம்

### புள்ளியிடும் திட்டம்



இந்த புள்ளியிடும் திட்டம் பரீட்சகர்களின் உபயோகத்திற்காக தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாற்றம் பெறலாம்

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

**32.** "சீன பீஜிங் ஒபேராவில் நடிகர் அணியும் வேட உடைகள், அதன் வர்ணங்கள் ஊடாகவே பாத்திரங்களும் இயல்புகளும் வெளிப்படுத்தப்பட்டன." ஒபேராவில் வரும் மஞ்சள் நிற ஆடை அணிந்தவர்கள்
(1) மந்திரிகளும் இராணுவத்தினரும் ஆவர்.
(2) அரச அலுவலர்களும் படை அதிகாரிகளும் ஆவர்.
(3) சக்கரவர்த்திகளும் அவர்களின் உறவினரும் ஆவர்.
(4) இளம் வயதினரும் வயது முதிர்ந்தோரும் ஆவர்.
(5) முரட்டுச் சுபாவமுடைய சக்கரவர்த்திகள் ஆவர். (......)

**33.** 'கொஹங்க கங்காரிய' சடங்கு செய்யப்படுவதற்கான காரணம் **அல்லாதது** எது?
(1) கடந்த போகத்தில் நல்ல விளைச்சல் தந்தமை
(2) விஜயன் குவேனிக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியமை
(3) பாண்டு வசுதேவன் வேங்கைப்புலி ஒன்றைக் கண்டு பயந்தமை
(4) 'கொஹங்க' என்ற பாதிப்பிசாசும் பாதிக்கடவுளுமான உருவத்தை மகிழ்வித்தல்
(5) குடும்பக் கஸ்டத்தை நீக்குதலும் ஊருக்கும் நாட்டுக்கும் நன்மை கிடைக்கச் செய்தலும் (......)

**34.** சிங்கள 'நாடகம' இல் கடவுள் வாழ்த்துப் பாடுபவர்
(1) பகுபூதய்யா (2) கோணங்கி (3) விகடகவி
(4) பொத்தே குரு (5) கட்டியக்காரன் (......)

**35.** சிங்கள நாடக வரலாற்றில் 'வீதி நாடக உலகின் அரசன்' என வர்ணிக்கப்படுபவர்
(1) தம்ம ஜாகொட (2) ஆர்.ஆர். சமரக்கோன்
(3) காமினி ஹத்தொட்டுவேகம (4) சுகதபால டி சில்வா
(5) குணசேன கலப்பதி (......)

**36.** யப்பானிய பிரபுத்துவ சடங்காசார வாழ்வின் காட்சிகளைச் சித்தரிக்கும் நாடகம்
(1) நோ (2) கபுக்கி (3) புன்ரகு (4) கோவாகா (5) கியோஜின் (......)

**37.** மத்தியகால பொது வணக்க முறை நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்ட அரங்கவெளி
(1) தேவாலயம் (2) ஊர்தி அரங்கு (3) பூத் அரங்கு
(4) பட்டணச் சதுக்கம் (5) மான்சன் அரங்கு (......)

**38.** பிரச்சினை நாடகங்களை மேற்கு ஐரோப்பாவில் தொடக்கி வைத்தவர்
(1) ஹென்றிக் இப்சன் (2) அன்ரன் செக்கோவ் (3) கார்சியா லோகா
(4) லூயி பிராண்டலோ (5) ஓகஸ்ற் ஸ்ரின் பேர்க் (......)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள கலைஞர் வைத்திருக்கும் வாத்தியம் யாது?
(1) கிற்றார்
(2) சித்தார்
(3) வீணை
(4) தம்புரா
(5) குயிக்குலின்



(......)

**40.** மேல்வருவனவற்றுள் 'சிருங்காரம்' எனும் ரசத்தை வெளிப்படுத்தும் தெரிவு யாது?


(1)


(2)


(3)


(4)


(5)

(......)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **58**

විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 4 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 3 | 34. | 4 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 4 | 36. | 1 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 1 | 37. | 1 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 4 | 38. | 1 |
| 09. | 1 | 19. | 4 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 5 | 40. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

✳ உபபகுதி **A** இலிருந்து இரண்டு வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து, நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) 'கலை' என்ற எண்ணக்கரு பற்றி பாடசாலை, சமூகம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்திச் சுருக்கமாக விவரிக்குக.

(ii) தரப்பட்ட சிறுகதையொன்றை ஆற்றுகையாக உருவாக்குவதில் காணப்படும் சாதக, பாதகங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) சமகால சமூகத்தின் நிலைமையைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளத்தக்க ஆற்றுகையொன்றைக் குறிப்பிட்டு, அதில் பிரதியின் (Script) முக்கியத்துவம் பற்றி விளக்குக.

(5 × 3 = 15 புள்ளிகள்)

**2.** (i) சமஸ்கிருத நாடகத்தின் 'கதைப்பின்னல்', 'கட்டமைப்பு' என்பவற்றைச் சுருக்கமாக விவரிக்குக.

(ii) நாட்டிய சாஸ்திரம் கூறும் இரண்டு வகை நடிப்புப் பாணிகள் பற்றித் தெளிவுபடுத்துக.

(iii) சமகால ஈழத்து அரங்கில் நாட்டிய சாஸ்திரத்தின் பிரயோகம் பற்றி விளக்குக.

(5 × 3 = 15 புள்ளிகள்)

**3.** சேக்ஸ்பியரின் 'குளோப்' அரங்கு, ஈழத்துப் பாரம்பரிய 'வட்டக்களரி' அரங்கு என்பவற்றில் மேல்வருவன அமையுமாற்றை விவரிக்குக.

(i) ஆற்றுகை வெளி
(ii) ஆற்றுகை முறைமை
(iii) பார்வையாளர் துலங்கல்

(5 × 3 = 15 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** ஈழத்தின் வெவ்வேறு காலப் பண்பாடுகளில் மேற்கிளம்பிய வெவ்வேறு அரங்க முறைமைகள் இரண்டை ஒப்பிட்டு விவரிக்குக.

(15 புள்ளிகள்)

**5.** பாரம்பரிய சமயச் சடங்குகளை அரங்கநிலையில் நின்று விவரிப்பதுடன், அவை எவ்வாறு சமூகக் குழுமநிலை அரங்காக விளங்குகின்றன என்பதையும் விளக்குக.

(15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) யப்பானிய 'கபுக்கி'
(ii) அபத்த நாடகம்
(iii) குறுநாடக ஆக்கம்
(iv) ஜெர்சி குறொட்டொவ்ஸ்கி
(v) ஆற்றுப்படுத்தலாக அரங்கு

(5 × 3 = 15 புள்ளிகள்)

✳✳✳

01.

i. **கலை என்ற எண்ணக்கரு பற்றி பாடசாலை, சமூகம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்திச் சுருக்கமாக விவரிக்குக.**

கலை இரண்டு மட்டங்களிலும்
- புரிந்து கொள்ளப்படுதல்
- செயற்படுதல் என்பவற்றிலுள்ள வித்தியாசங்கள் புலப்படும் படி விளக்கங்கள் அமையலாம்.

- கலை என்பது பண்பாட்டினுள் நிலைகொண்டு வெளிப்படுத்துவதிலும் தொடர்புறுத்துவதிலும் மனிதத்திறன் தொழிற்படும் முறைமை என *Honigman* குறிப்பிடுகின்றார்.

- படைப்பாக்கத்திறனும் அதற்கான உந்துதலும் கலைப்படைப்புக்கு முக்கியமாக அமைகின்றது. இந்த உந்துதலுக்கு சமூகம் முக்கிய காரணியாக அமைகின்றது. ஏனெனில் கலைப்படைப்புக்களில் சமூக வாழ்வியல் முறைமை, சமூக ஒழுங்கமைப்பு, பொருளாதார நடவடிக்கைகள், உறவு முறை தாக்கம் செலுத்துகின்றது.
- சமூகத்தை கலைப்படைப்பு பிரதிபலிக்கின்றது. சமூகத்தின் எடுத்துணர்த்தும் உயிர்ப்பு மையமாக அமைகின்றது. றேய்மண்ட் வில்லியம்ஸ் (IF FORMING SPIRIT OF GROUP) என இதனைக் குறிப்பிடுகின்றார். இதனாலேயே சமூகத்திற்கு சமூகம் கலைப்படைப்புக்கள் மாறுபடுகின்ற போது கலை சமூகத்திலிருந்து பல்வகைத்தன்மையையும் கொண்டு வருகின்றது.

- பாடசாலை, சமூகக் கட்டமைப்பின் உள்ளடக்கலில் ஒன்று. அதனால் சமூகத்தைச் சார்ந்த கலைப் படைப்புக்களையே இதுவும் பிரதிபலிக்கின்றது. ஆயினும், மட்டுப்படுத்தப்பட்ட தேவை, சூழல் இந்நிறுவனத்தின் கலைகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. சமூகம் பல குழுமங்களை கொண்டிருக்க பாடசாலை குறிப்பிட்ட குழும அமைப்பைக் கொண்டதால் அவர்கள் சார்ந்ததாகவும் அமைகின்றது.

- பல்வேறு கலை வடிவங்கள் அல்லது பல்வேறு திறன் வடிவங்கள் இல்லாது கற்றல் தேர்ச்சியுடன் கூடிய குறிப்பிட்ட கலைப்படைக்களுக்கான உந்துதல் அதிகமாக உள்ளது. மாணவர்களின் உளத் தேவையின் அடிப்படையிலும் இங்கு கலைகள் படைக்கப்படுகின்றன.

(05 புள்ளிகள்)

ii. **தரப்பட்ட சிறுகதையொன்றை ஆற்றுகையாக உருவாக்குவதில் காணப்படும் சாதக, பாதகங்களைச் சுருக்கமாக விவரிக்குக.**

- ஒரு குறிப்பிட்ட சூழமையிவில் மனிதர்கள் இயங்குகின்ற முறைமையும் ஒரு பாத்திரத்தின் நிலையில் சம்பவங்கள் தோற்றுவிக்கின்ற மனக்கிளர்ச்சியும், சம்பவத்தின் செயல்கள் ஆசிரியரால் எடுத்துக் கூறப்படுவதுமான இலக்கிய வடிவம் சிறுகதை எனலாம்.

**சிறுகதையொன்றை ஆற்றுகையாக உருவாக்குவதிலுள்ள சாதகமான விடயங்கள்**

- ஆற்றுகைக்கான சிறந்த கதைக்கருவை இலகுவாகத் தெரிந்தெடுக்க முடியும்.

- சூழமைவுகள், பாத்திரங்கள் முன்னரே ஒழுங்கமைப்பட்டிருப்பதனால் ஆற்றுகை வடிவமாக்கல் இலகுவாகின்றது.

- ஆற்றுகையின் கோர்ப்பு முறைமைக்கு ஏதுவாக அமைகின்றது.

**பாதகமான விடயங்கள்**

- நெறியாளரின் கற்பனை மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்து விடுகின்றது.

- சிறுகதை செயல் வடிவம் கொடுக்க முடியாத சம்பவங்களை விவரிக்கின்ற போது அதனை ஆற்றுகை நிலைக்கு கொண்டு வருவது சவாலாக அமைகின்றது.

- ஆற்றுகை வடிவமைப்பில் சிறுகதை இல்லாதிருத்தல்.

- சிறுகதை ஆசிரியர் பாத்திரத்தின் பௌதிக இயல்பை அரங்கில் முழுமையாகக் கொண்டு வர முடியா-மல் இருக்கும்.

- கதை பல களங்களைக் கொண்டமைந்ததால் ஆற்றுகை குறுகிய நேரத்தில் படைக்கும்போது பல களப்படைப்பு சவாலாக அமையும்.

(படைப்பாக்க படிமுறைக்கு (Creative Process) சாதகமான, பாதகமான நிலைமைகள் அனுபவத்தினூடாக விளக்கப்படல் வேண்டும்)

(05 புள்ளிகள்)

iii. **சமகால சமூகத்தின் நிலைமையைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளத்தக்க ஆற்றுகையொன்றைக் குறிப்பிட்டு, அதில் பிரதியின் (Script) முக்கியத்துவம் பற்றி விளக்குக.**

- நாடகாசிரியர் அல்லது நெறியாளரின் திறன் அவர்களின், விருப்பிற்கேற்ப மோடிமை தெரிவு செய்யப்படும் ஆயினும், அடிப்படையாக ஒரு நாடகப் பிரதி தேவை.

- நாடகப் பிரதி ஆற்றுகையின் மூலமாக அமைவதோடு ஆரம்பத் திட்டமிடலுக்கும் உதவுகின்றது.

- தெரிவு செய்யப்படும் கதைக் கருவிக்கேற்ப பாத்திரங்கள், சூழமைவுகள், உணர்வுகள், சம்பவத் தொகுப்புக்கள், உரையாடல்கள் என்பன எழுத்துரு ஊடாக ஒழுங்கமைக்கப்படுகின்றது.

- புதிய கதைக்கருவைத் தெரிவு செய்கின்றபோது புதிய பிரதியின் தேவை அவசியமாகின்றது. இது ஆற்றுகையொன்றின் முன் செயலொழுங்குகள் யாவற்றுக்கும் அடித்தளமாக அமைகின்றது.

- பிரதியொன்றினை வைத்துக்கொண்டு ஆற்றுகைக்கு முன்னரான பகுப்பாய்வு விமர்சனத்தைச் செய்ய முடிவதோடு இது ஆற்றுகைக்குரிய முன்னரான திருத்தங்களுக்கு ஏதுவாக அமையும்.
  உதாரணம் : சமகாலத்தின் பொருத்தப்பாட்டிற்கு ஏதுவான திருத்தங்கள்

- ஆற்றுகையில் ஈடுபட இருக்கும் கலைஞர்கள் யாவருக்கும் அளிக்கை தொடர்பான முழுமை பற்றிய தெளிவை எழுத்துருவை வைத்துக்கொண்டு தெரிந்து கொள்ள முடியும்.

(05 புள்ளிகள்)

( மொத்தம் 15 புள்ளிகள்)

**02.**

i. **சமஸ்கிருத நாடகத்தின் கதைப்பின்னல், கட்டமைப்பு என்பவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.**

**கதைப்பின்னல்**

- கதைப்பின்னல் என்பது சம்பவங்களின் நிரலொழுங்கு
- 'அர்த்தப் பிரகிருதிகள்' எனவும் அழைக்கப்படும்.
- சமஸ்கிருத கதைப்பின்னலின் பீஜ, பிந்து, பதகா, பிரகரி, கார்ய ஆகிய ஐந்து கூறுகளையும் எடுத்துக்காட்டி விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.

**கட்டமைப்பு**

- கட்டமைப்பு ஐந்து படிநிலைகளைக் கொண்டது.
- இப்படிநிலை ஆரம்ப, பிரயத்தன, பிரத்தியாச, நியதாப்தி, பலாகம

என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்

(05 புள்ளிகள்)

ii. **நாட்டிய சாஸ்திரம் கூறும் இரண்டு வகை நடிப்புப் பாணிகள் பற்றித் தெளிவுபடுத்துக.**

அ. லோக தர்மி
ஆ. நாட்டிய தர்மி
(ஆகியன பற்றி விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்)

(05 புள்ளிகள்)

iii. **சமகால ஈழத்து அரங்கில் நாட்டிய சாஸ்திரத்தின் பிரயோகம் பற்றி விளக்குக.**

- நாடக அமைப்பிலும் நாடகம் வெளிப்படுத்தும் முறைமையிலும் (நால்வகைச் சித்திரிப்பு) தற்கால ஈழத்து அரங்க வெளிப்பாட்டு முறைமைகளில் நாட்டிய சாஸ்திரத்தின் பிரயோகம் பற்றி பரீட்சார்த்திகள் அனுபவ ரீதியாக விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.

(05 புள்ளிகள்)
( மொத்தம் 15 புள்ளிகள்)

**03. சேக்ஸ்பியரின் 'குளோப்' அரங்கு, ஈழத்துப் பாரம்பரிய 'வட்டக்களரி' அரங்கு என்பவற்றில் மேல்வருவன அமையுமாற்றை விளக்குக.**

i. **குளோப் அரங்கு**

**ஆற்றுகை வெளி**

- எலிசபெத் காலத்தில் ஆரம்பத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட இடத்தினை 'இன்ஸ்' என அழைத்தனர்.
- 'இன்ஸ்' என அழைக்கப்பட்டதன் மாற்றம் பெற்று வந்த அரங்குகளில் குளோப் ( 1599 ) அரங்கும் ஒன்றாகும்.
- குளோப் அரங்கு எண்கோண வடிவில் அமைந்த கட்டடம்.
- இவ்வரங்கு நிலத்திலிருந்து 4 - 6அடி உயரமானது.
- இவ்வரங்கின் பின்புறம் வரையும் செல்லும் இதன் முன் மேடையே 'முன் அரங்கு' துருத்திய அரங்கு ஆகும்.
  இதுவே 'பிரதான களம்' ஆகும்.
- முன் அரங்கிற்குப் பின்னால் உள்ளக அரங்கு காணப்படும். இது பாத்திரங்கள், பொருட்கள் வெளிப்பட உதவும்.
- அரங்கில் இரு கதவுகள் காணப்படும். அதனூடாக நடிகர் உள்ளே வெளியே செல்வர்.
- மேடையின் இரு புற வாசலுக்கு மேலே நேரே இரு யன்னல் காணப்படும்.
- மூன்றாவது தளத்தில் இசைக்குழுவினர் இருப்பர்.
- இரு தளத்துடன் மூன்றாவது தளத்தையும் நடிப்பிற்காகப் பயன்படுத்துவர்.
- பார்வையாளர் அமரக்கூடிய வகையில் பல்கனி அமைப்புள்ளது.
- முன் துருத்திய பகுதியைச் சுற்றிப் பார்வையாளர்கள் நின்று பார்ப்பர்

ii. **ஆற்றுகை முறைமை**

- பெரும்பாலும் மாலை நேரங்களில் ஆற்றுகை இடம்பெற்றது.
- ஆற்றுகை ஆரம்பிக்கும்போது அரங்கின் கூரையில் கொடியேற்றப்படும்.
- அரங்கில் காணப்படும் இரு கதவுகளை நடிகர் உள்ளே வரவும் வெளியே செல்லவும் பயன்படுத்தினர்.
- இச்செயற்பாடு நடிகர்களுக்கு எந்த இடையூறையும் ஏற்படுத்தவில்லை.
- மேடையின் இரு புற வாசலுக்கும் மேலே, நேரே இரு யன்னல்கள் இருந்தன. அதன் ஊடாக நடிகர்கள் உறவாடினர்.
- மூன்றாவது தளத்தையும் நடிப்பதற்காகப் பயன்படுத்தினர்.
- ஆற்றுகையின் தேவைக்காக மரம், பாறை, படுக்கை என்பன பயன்படுத்தப்பட்டன.
- புதை குழிக் காட்சிக்குப் பொறி வாயிலும், பிசாசு, நெருப்பு, புகை போன்றவற்றைக் காட்டப் பொறிகளும் கம்பிகளும் பயன்படுத்தியதோடு, செய்திகளை அறிவிக்க மணிகள், பீரங்கிகள் பயன்படுத்தினர்.
- இரவுக் காட்சிகளைக் காட்டப் பந்தம், விளக்கு, மெழுகுதிரி பயன்படுத்தினர்.
- பெருங்காட்சிப் பண்புடைய உரையாடல்கள், உடையலங்காரங்கள், இசை, நடனம் என்பனவும் ஆற்றுகையின் போது இடம்பெற்றன.

iii. **பார்வையாளர் துலங்கல்**

- பார்வையாளர்கள் அனுமதிச் சீட்டுப் பெற்று ஆற்றுகையைப் பார்வையிட்டனர்.
- பல்கனி இருக்கைகளுக்கு கூடிய பணமும் முன் துருத்திய பகுதிக்கு குறைந்த பணமும் வசூலிக்கப்பட்டது.
- பார்வையாளரை உணர்ச்சி நிலைக்கு உட்படுவதாக அரங்கு அமைந்தது.

ii. வட்டக்களரி

**ஆற்றுகை வெளி**

- தமிழ்ப்பண்பாட்டில் கூத்துக்கள் ஆடப்படும் இடம்.
- கூத்து அளிக்கை செய்யும் இடமே வட்டக்களரி ஆகும்.
- தரையில் இருந்து 3 அடி உயர்த்தப்பட்ட வட்டவடிவ அரங்காகும்.
- ஏழு அல்லது எட்டு கம்பங்கள் நடப்பட்டு அதன்மேல் சீலைகளைக் கொண்டு கூரை மேயப்படும்.
- கம்பங்களும் கூரைகளும் குருத்தோலை, சாறி என்பன கொண்டு அலங்கரிக்கப்படும்.
- ஆற்றுகைக் களரியில் தோரணம் கட்டும் வழக்கமும் உண்டு
- இரவு வேளையில் விடிய விடிய இதில் கூத்து நடைபெறும்
- களரியைச் சுற்றி தீப்பந்தங்களும் எண்ணெய் விளக்குகளும் வைத்து ஒளியூட்டப்படும்.
- கூத்தர்கள் வட்ட வடிவில் ஆடியும் பாடியும் வசனம் பேசியும் கதை நிகழ்த்திச் செல்வர்.

**ஆற்றுகை முறை**

- ஆடல் மேலோங்கி காணப்படும்
- கடவுள் வாழ்த்துடன் ஆரம்பித்து வாழிபாடுதலுடன் நிறைவுறும்
- மோடிகளுக்கு அமைய ஆற்றுகை இடம்பெறும்.
- சபையோர் நடுவில் நிற்க கூத்தர் வட்டக்களரியை சுற்றிவர ஆடுவர்
- பாரம்பரியமான வேட உடை பகட்டான வர்ணப் பிரயோகம் பாவிப்பார்கள்

**பார்வையாளர் துலங்கல்**

- பார்வையாளர் களரியைச் சுற்றி அமர்ந்திருப்பர்
- கூத்தரை திரைபிடித்து வரவேற்றல், பட்டாசு கொழுத்தி வரவேற்றல், காசுமாலை போடல், சால்வை அணிவித்தல்.
- பிற்பாட்டு பாடும் போது பார்வையாளர்களும் சேர்ந்து பாடுவர்
- நடிகர்கள் பாடலைப் பிழையாகவும் சுருதி மாறியும் பாடும் போதும் பார்வையாளருக்குள் இருந்து சிலர் அதைச் சரியாக எடுத்துக் கொடுப்பர்.
- நடிகர்களும் அண்ணாவியாரும் களைப்படையும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு தட்டு மிளகுதண்ணீர், தண்ணீர் போன்றவற்றை எடுத்துக் கொடுப்பர்
- அண்ணாவியார் களைப்படையும் போது சபையோரில் இருந்து ஒரு அண்ணாவியார் வெளிப்பட்டு தொடர்ந்து மத்தளத்தைக் கட்டி அடிப்பார்.
- சோகமான கட்டங்களில் பார்வையாளர்களில் சிலர் அழுவர், சண்டைக்கட்டங்களில் ஆர்வத்தோடு உற்று அவதானிப்பர்.

(இவை போன்ற விடயங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## பிரிவு B

**04. ஈழத்தின் வெவ்வேறு காலப் பண்பாடுகளில் மேற்கிளம்பிய வெவ்வேறு அரங்க முறைமைகள் இரண்டை ஒப்பிட்டு விவரிக்குக**

ஈழத்தில் உருவான தமிழ் /சிங்கள நாடகங்களில் எவையேனும் இரு அரங்க முறைகளைக் குறிப்பிட்டு ஒப்பிட்டு விவரித்தல் வேண்டும்.

- ஈழத்தில் உருவான தமிழ் அரங்க முறைகளுக்கு உதாரணங்களாக;

- வடமோடி,தென்மோடி,பறை மேளக் கூத்து, வசந்தன் கூத்து,மகிடிக் கூத்து,காத்தவராயன் கூத்து, வட பாங்கு, தென்பாங்கு, கோவலன் கூத்து, காமன் கூத்து, இசை நாடகங்கள், நவீன நாடகங்கள்

- ஈழத்தில் உருவான சிங்கள அரங்க முறைகளுக்கு உதாரணங்களாக:

- கோலம், சொக்கரி, நாடகம், நூர்த்தி போன்றன , சிங்கள நவீன நாடகங்கள்

(இவற்றுள் ஏதாவது அரங்க முறைகள் இரண்டினை ஒப்பிட்டு விவரித்து எழுதுதல் எதிர்பார்க்கப்படுகின்றது)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**05. பாரம்பரிய சமயச் சடங்குகளை அரங்க நிலையில் நின்று விவரிப்பதுடன் அவை எவ்வாறு சமூகக் குழுமநிலை அரங்காக விளங்குகின்றன என்பதையும் விளக்குக.**

- சமயச் சடங்குகள் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம்.
- சடங்கு தொடர்பாக அறிஞர்கள் முன்வைத்த கருத்துக்களைக் குறிப்பிடுதல்.
- ஆற்றுவோர், பார்ப்போர், வெளி என்பவற்றின் இணைப்பு அரங்காகும்.
- அரங்கு என்பது நாடக நிகழ்ச்சி கட்புலனாக முகிழ்ந்து எழும் இடத்தைக் குறிக்கும்.
- ஆரம்பம், முரண்பாடு, தீர்வு என்ற ஒழுங்கு காணப்படும்.
- பல கலைஞர்களும் பல கலைகளும் ஒன்றிணையும் இடம் அரங்கு.

இவ்வாறான அரங்கு பற்றிய எண்ணக்கருவைத் தெளிவுபடுத்தல்.

- சமயச் சடங்குகளில் காணப்படுகின்ற அரங்க நிலைப்பட்ட பண்புகளில் ஆள் மேற்கொள்ளல், ஆற்றுவோர் பார்ப்போர் ஆற்றுகை வெளியில் ஒன்றிணைதல், ஊர்வலப் பண்பு, சமூக ஒருமைப்பாடும் சமூகத்தை ஒன்று கூட்டுதல், தொடர்பு கொள்ளல், உணர்வுகளை வெளிப்படுத்தல் போன்ற பண்புகளால் சமூகக் குழுமநிலை அரங்காக விளங்குகின்றது என்பதை விளக்குதல்.

(இவை போன்ற விளக்கங்களை கவனித்து புள்ளிகள் வழங்கலாம்)

(குறைந்தது இரண்டு விடயங்களை தெளிவுபடுத்தி எழுதியிருப்பின்)

(15 புள்ளிகள்)

**06. மேல்வருவனவற்றுள் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

i. **யப்பானிய கபுக்கி**

- யப்பானின் மக்களின் பண்பாட்டோடு இணைந்த அரங்காகும்.
- அரங்க மூலகங்களைப் பயன்படுத்தி தாளத்தோடிணைந்த சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்ட முறைமை
- க - (Ka) - பாடல், பு (Bu) - ஆடல், கி (Ki) - நடிப்பு
- கனாமிச்சிப் பாதையோடிணைந்த அரங்கச் சிறப்பு
- ஆற்றுவோர் பார்வையாளர் உறவு.

(இவை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக)

(05 புள்ளிகள்)

ii. **அபத்த நாடகம்**

- இரண்டாம் உலக மகாயுத்தம் தந்த அதிர்ச்சியே அபத்த நாடகத்தின் தோற்றம், பின்னணியாகும்
- அபத்த வாதத்தின் பிதா மகன் ஜீன்போல் சாத்திரே எனும் தத்துவ ஞானி
- வாழ்க்கையை அபத்தமானதாக அவர் கண்டார்.
- இத்தத்துவத்தினை பின்பற்றி அபத்த நாடகம் எழுந்தது.
- சாமுவேல் பெக்கட் , அயனஸ்கோ போன்றோர் முன்னோடி அபத்த நாடகர்களாவர்.
- வழமையான நாடகம் போல அன்றி வடிவம், ஆற்றுகை, நடிப்பு ஆகியவற்றிலும் இது ஓர் அபத்த தன்மை கொண்டதாக இருந்தது .
- ஈழத்தில் நா. சுந்தரலிங்கத்துக்கூடாக இது அறிமுகமாகிறது.

(இவை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக)

(05 புள்ளிகள்)

iii. **குறுநாடக ஆக்கம்**

- மிகக் குறைந்த கால அளவுக்கு நிகழ்த்தக்கூடியதாக அமைதல் வேண்டும்.

- சிறிய கதைப் பின்னலையும், குறைந்த பாத்திரங்களையும் கொண்டது.

- சொல்லாடல்கள் குறைந்தளவானதாகவும், அர்த்தமுடையதாகவும் காணப்படுதல்.

- மேடைக்குறிப்புக்கள் தெளிவானதாகவும் குறைந்தளவானதாகவும் காணப்படுதல்.

(இவை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.)
(05 புள்ளிகள்)

iv. **ஜெர்சி குறொட்டொவ்ஸ்கி**

- போலந்து நாட்டவர்
- வறுமை / எளிமை அரங்கைத் தோற்றுவித்தவர்.
- இவர் தனது ஆற்றுகை மூலகங்களை விவிலியப் பாடல்களில் இருந்தும் பொதுவணக்கப் பாடல்களில் இருந்தும் பெற்றுக் கொண்டார்.
- அரங்க மூலங்களில் நடிகனின் திறமைக்கே முக்கியத்துவம் கொடுத்து நாடகத்தினை நிகழ்த்திக் காட்டினார்.
- நடிகர் ஒரு யோகியாக அரங்கில் வாழவேனும் என வலியுறுத்தினார்
- நடிகனுக்கும் பார்வையாளருக்குமான உறவினை வலுப்படுத்தினார்.
  உதாரணமாக, நடிகனின் நடிப்பானது நாடகத்தைப் பார்ப்போர் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்வதற்கான ஒரு வழிகாட்டுதலாக அமைய வேண்டும் என்று பரீட்சித்துக் காட்டினார்.

(இவை போன்ற குறிப்புக்கள் இருப்பின் புள்ளிகள் வழங்குக.)
(05 புள்ளிகள்)

v. **ஆற்றுப்படுத்தலாக அரங்கு**

- பார்வையாளரின் உளத்தளையினை நீக்குவதற்கு ஏதுவாக அமைந்த நாடகங்கள்

- பாரம்பரிய சடங்கரங்குகள் ஆற்றுப்படுத்தலுக்கான பல நுட்பங்களை உள்ளடக்கி உள்ளது.
  உதாரணம் : ஆடல், பாடல், தியானம்

- மேலைத்தேயத்தில் இந்த நாடக முறைமையில் முக்கியமானவர்களாக குறோட்டோவஸ்கியை இலங்கைத் தமிழ் அரங்கில் க. சிதம்பரநாதன் போன்றோரையும் குறிப்பிடலாம்.

(இவை போன்ற குறிப்புக்கள் இருப்பின் புள்ளிகள் வழங்குக.)

(05 புள்ளிகள்)
(மொத்தம் 3 × 5 = 15 புள்ளிகள்)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

17.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| | |
|---|---|
| பகுதி I<br>மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
* இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

1. உளவியல்சார் நாடகங்களைப் படைத்த கிரேக்க நாடகாசிரியர்
(1) மெனாண்டர் (2) ஈஸ்கிலஸ் (3) அரிஸ்டோபன்ஸ்
(4) சோபோகிளிஸ் (5) யூரிபிடிஸ் (......)

2. சிங்கள 'தொவில்' சடங்கரங்கில் வருகின்ற பாத்திரம்
(1) வெசமுனி (2) கோணங்கி (3) பொத்தேகுரு
(4) பயூன் (5) பகுபூதையா (......)

3. சங்க காலத்தில் கோடு, முழவு ஆகிய வாத்தியங்களை வாசித்தோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) பொருநர் (2) பாணர் (3) கோடியர்
(4) விறலியர் (5) வயிரியர் (......)

4. இசை, நடனம் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆற்றுகைக் கலைஞர்கள்
(1) வி.வி. வைரமுத்து, அரசு
(2) சின்னமணி, பாலதாஸ்
(3) தைரியநாதன், கலாமணி
(4) பாலமுரளி கிருஷ்ணா, ருக்மணி அருண்டேல்
(5) பாலமுரளி கிருஷ்ணா, கண்ணன் (......)

5. த சோபேறி (The Choephori), புளுட்டஸ் (Plutus), அன்றிகனி (Antigone) போன்ற கிரேக்க நாடகங்களின் ஆசிரியர்கள் முறையே
(1) ஈஸ்கிலஸ், அரிஸ்டோபன்ஸ், யூரிபிடிஸ்
(2) ஈஸ்கிலஸ், அரிஸ்டோபன்ஸ், சோபோகிளிஸ்
(3) யூரிபிடிஸ், அரிஸ்டோபன்ஸ், மெனாண்டர்
(4) யூரிபிடிஸ், மெனாண்டர், சோபோகிளிஸ்
(5) சோபோகிளிஸ், அரிஸ்டோபன்ஸ், மெனாண்டர் (......)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය பாட இலக்கம் **58** විෂයය பாடம் **நாடகமும் அரங்கியலும்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 2 | 21. | 3 | 31. | 5 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 2 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 4 | 26. | 2 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 5 | 27. | 3 | 37. | 1 |
| 08. | 5 | 18. | 3 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 2 | 29. | 4 | 39. | 3 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 1 | 40. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) வில்லியம் சேக்ஸ்பியரது 'கிங்லியர்' நாடகத்தின் பிரதான மோதுகை யாது? (3 புள்ளிகள்)

(ii) 'கிங்லியர்' பாத்திரம் பெருங்காட்சிப் பண்புகளுடன் வெளிப்படும் சந்தர்ப்பங்களை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) பொதுமையான மனித உணர்வுகள் 'கிங்லியர்' நாடகத்தினூடாக வெளிக்கிளம்பும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. (7 புள்ளிகள்)

**2.** (i) 'இராவணேசன்' நாடகத்தின் கரு, மோடி, பாத்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) இராவணன், மண்டோதரி ஆகிய பாத்திரங்களுக்கு இடையேயான மோதுகை செயல்நிலையில் வெளிப்படும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) இராவனேசன் நாடகத்தில் 'இந்திரஜித்' பாத்திரம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள முறை பற்றி விளக்குக. (7 புள்ளிகள்)

**3.** (i) ஈழத்தில் தேன்றிய 'பா' நாடகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) 'கோடை' நாடகப் பாத்திரச் சித்திரிப்பில் கிராமிய சமூகப் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் துல்லியமாக வெளிப்படும் விதத்தை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) 'கோடை' எழுத்துருவை மையப்படுத்தி அக்கால ஏகாதிபத்திய ஆட்சி முறை மக்களின் மனப்பாங்கில் ஏற்படுத்திய பாதிப்பினை விளக்குக. (7 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** அபிக்ஞான சகுந்தலத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, சகுந்தலை பாத்திரம் எவ்விதம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படுகிறது என்பதனை விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** 1990 களுக்குப் பின்னரான ஈழத்துத் தமிழ் அரங்கு பரீட்சார்த்த அரங்க முயற்சிகளின் விளைபயனாக விருத்தி பெற்று வந்துள்ளது என்பதனை அக்கால சமூக, அரசியல், சூழலமைவு, அரங்குகளின் உள்ளடக்கம், அவ்வரங்குகளின் நெறியாள்கை முறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கட்டியக்காரன்
(ii) மகிடிக் கூத்து
(iii) சொக்கரி
(iv) பீஜிங் ஒபேறா
(v) மாதவியின் பதினொரு வகை ஆடல்

(5 × 3 = 15 புள்ளிகள்)

பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களையும்
பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து,
எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி II
## பிரிவு A

01.

i. **வில்லியம் சேக்ஸ்பியரது கிங்லியர் நாடகத்தின் பிரதான மோதுகை யாது?**

உண்மைக்கும் போலிக்குமிடையிலான போராட்டமே இங்கு பிரதான மோதுகையாகிறது. அதாவது லியருக்கும் பெண்பிள்ளைகளுக்கும் (கொனேல், றீகன், கோடில்லியா) கிளசெஸ்ரர்(கிளஸ்ரர்) பிரபுவுக்கும் மகனான எட்மண்டுக்குமிடையில் ஏற்படும் முரண்பாடுகள்

(03 புள்ளிகள்)

ii. **கிங்லியர் பாத்திரம் பெருங்காட்சிப் பண்புகளுடன் வெளிப்படும் சந்தர்ப்பங்களை விளக்குக.**

- கிங்கிலியர் நாடகத்தில் லியர் மன்னர் மேடையில் அசையும் செயல்நிலைகள், அவரது உரையாடல்கள், அணிந்திருக்கும் வேட உடை போன்றவற்றுக் கூடாக பெருங்காட்சிப் பண்பு வெளிப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு விளக்க வேண்டும்.
  உதாரணமாக:
  - கிங்கிலியர் ஆரம்பத்தில் பரிவாரங்களுடன் அரண்மனை வருதல்.
  - அரச அங்கி அணிந்து காணப்படல்.
  - சித்தப் பிரமையில் கிழிந்த உடையுடன் தோன்றுதல்.
  - பாசறையின் கூடாரத்தில் சிகிச்சை பெறல்.
  - மேடையில் தோன்றும் போது பின்னணி இசை வாசிக்கப்படல்.

- லியர் நாடக இறுதியில் கோடில்லியாவின் இறந்த உடலை ஏந்தியவாறு தோன்றுதல்.

(இவை போன்றவற்றை எடுத்துக்காட்டுவது எதிர்பார்க்கப்படுகின்றது.)

(05 புள்ளிகள்)

iii. **பொதுமையான மனித உணர்வுகள் கிங்லியர் நாடகத்தினூடாக வெளிக்கிளம்பும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.**

- மனிதர்களிடத்தில் காணப்படும் ஏமாற்றுதல், நம்பிக்கைத் துரோகம், போலிகளைக் கண்டு ஏமாறுதல் போன்ற பொதுமையான மனித உணர்வுகள் கிங்கிலியர் நாடகப் பாத்திரங்களுக்கூடாக வெளிப்படும் விதங்களை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி விளக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது.

| | |
|---|---|
| உதாரணம் காட்டியிருப்பின் | 03 புள்ளிகள் |
| மனித உணர்வுகளை எடுத்துக்காட்டி இருப்பின் | 04 புள்ளிகள் |

(07 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

02.

i. **இராவணேசன் நாடகத்தின் கரு, மோடி, பாத்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.**

**கரு**

தோல்வி நிச்சயம் என்று தெரிந்தும், தன்மானத்திற்காகப் போர் செய்து இலங்கையின் வீழ்ச்சி ஏற்கும் தன்னிகரில்லாத அவலநாயகனின் நிலை

(இது சார்ந்து விடை எழுதியிருப்பின் கவனத்தில் கொள்க.)

**மோடி**

யதார்த்தம் அல்லாத மோடி (Nonrealitic)

(இது சார்ந்து விடை எழுதியிருப்பின் கவனத்திற் கொள்க.)

**பாத்திரங்கள்**

இராவணேசன், மண்டோதரி, இந்திரஜித், கும்பகர்ணன், இராமன், இலக்குவணன், அங்கதன், படை வீரன்.

(03 புள்ளிகள்)

ii. **இராவணன், மண்டோதரி ஆகிய பாத்திரங்களுக்கு இடையேயான மோதுகை செயல்நிலையில் வெளிப்படும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக.**

- இராவணன் தன்மானத்தினை இழக்க விரும்பாத பாத்திரமாகவும் மண்டோதரி தாய்மைகளின் பிரதிநிதியாக போரின் இழப்புக்களை விரும்பாத பாத்திரமாகவும் படைக்கப்பட்டுள்ளமையால் இவ்விரு பாத்திரங்களுக்கு இடையேயும் மோதுகை, செயல் நிலைகள் வெளிப்படுகின்றன.

**உதாரணம்**

இராவணன் போருக்குச் செல்லும் சந்தர்ப்பம், இராவணன் இந்திரஜித்தை போருக்கு அனுப்பும் சந்தர்ப்பம்

(இவை போன்ற சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி விளக்கியிருப்பின் புள்ளிகளை வழங்கலாம்.)

(05 புள்ளிகள்)

iii. **இராவணேசன் நாடகத்தில் இந்திரஜித் பாத்திரம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள முறை பற்றி விளக்குக.**

- இராவணேசன் நாடகத்தில் இந்திரஜித் பாத்திரத்தின் வரவு தொடக்கம் இறப்பு வரையான காட்சிகள் ஊடாக இப்பாத்திரம் வளர்த்தெடுக்கப்படும் முறைமையினை இராவணேசன் நாடக பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது

**உதாரணமாக:**

இந்திரஜித் வரவு - வீரம், வேகம், இளமைத் துடிப்பு

தந்தையுடன் உரையாடல் - தெளிவு, புத்திக்கூர்மை

தந்தைக்காகப் போர் செல்லல் - பாசம்

போரில் தோற்கடிக்கப்படுதல் - சூழ்ச்சியை அறிதல்

மீண்டும் சினம் கொண்டு போர் செய்தல், இறத்தல் - தன்னம்பிக்கை

(இவை போன்ற விடயங்களை எடுத்துக்காட்டுவது எதிர்பார்க்கப்படுகின்றது.)

(07 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.**

i. **ஈழத்தில் தோன்றிய 'பா' நாடகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.**

**உதாரணமா :**

| | | |
|---|---|---|
| - கோடை | - மனக்கண் | - வெறியாட்டு |
| - புதியதொரு வீடு | - மழைக்கை | |
| - முற்றிற்று | - இருதுயரங்கள் | |

(03 புள்ளிகள்)

ii. **கோடை நாடகப் பாத்திரச் சித்திரிப்பில் கிராமிய சமூகப் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் துல்லியமாக வெளிப்படும் விதத்தை விளக்குக.**

- அரசியல், பண்பாட்டு, பொருளாதார மாற்றங்கள் கிராமிய சமூக பண்பாட்டிலும் தாக்கம் செலுத்துவதோடு மனிதர்களின் நடத்தையிலும் சிந்தனையிலும் மாற்றத்தை வெளிப்படுத்துகின்றன.

**பஞ்சையர்**

இக்காலத்தில் உலகளாவிய ரீதியில் பரவலடைந்த பொதுவுடமைச் சிந்தனை கிராமத்தை நோக்கி நகர்ந்துள்ளதை பஞ்சையர் எனும் பாத்திரச் சித்திரிப்பில் காணலாம். புதிய சிந்தனைப் போக்கு மாந்தர்களை நேசித்தல் எனும் பண்புகளை இவரிடம் காணமுடிவதோடு ஆங்கிலேயர் ஆட்சியினால் கோயில்கள் பொலிவிழந்து போனதன் நிலை முதல் வருடத்து திருவெம்பாவை, பணத்தினை மாணிக்கம் குடும்பத்திற்கு கொடுக்க முடியாத நிலையில் இப் பாத்திர வெளிப்பாடு அமைகின்றது.

**மாணிக்கம்**

சமூகத்தில் கலைகளுக்கு ஏற்பட்ட நிலை மாணிக்கம் எனும் பாத்திரச் சித்திரிப்பில் வெளிப்படுத்தப்படுகின்றது. கலைகளுக்கான வாய்ப்பு, மதிப்புக் குறைந்தபோது தான் நேசிக்கும் நாதஸ்வரக் கலையை வளர்க்கவும், பேணவும் முயலுகின்றார். நிராகரிப்புக்கு இடையிலும் சோமுவிற்கு கலையை முழுமையாகக் கற்றுக் கொடுக்க விளைகின்றார்.

**செல்லம்**

சமூகத்தில் ஆங்கிலக் கல்வியின் மோகமும், அரச உத்தியோக விருப்பும் பரவலடைந்திருந்ததையும் அதன் தாக்கத்தையும் செல்லம் எனும் பாத்திரச் சித்திரிப்பில் காணமுடிகின்றது. கணேசுவிற்கு குடும்பத் தொழிலை மறைப்பித்து அரச உத்தியோகத்திற்குரிய ஒருவனாக மாற்ற நினைப்பதும் மகள் கமலிக்கு அரச உத்தியோகத்தர் என்பதற்காக முருகப்புவை திருமணம் செய்து வைக்க விரும்புவதும் கொண்டு வரப்படுகின்றது. ஒரு சாதாரண தாயாக நாதஸ்வரத் தொழிலால் வருமானமற்றிருக்கும் நிலையில், இவ்வாறு எண்ணுகின்றார். சிங்கப்பூர் பென்சனியர் கொடுத்த யப்பான் சிலுக்கு சேலையை பஞ்சையர் செல்லத்திடம் கொடுப்பதும் அதைக் கமலி .. கட்டிப்பார்க்கட்டும் என மொழிவதும் பண்பாட்டு மாறுதலின் கூறாக மிளிர்கின்றது.

**கணேசு**

இப்பாத்திரச் சித்திரிப்பு பண்பாட்டு மாறுதலுக்கு, இடையில் ஊடாடுவதாகச் சித்திரிக்கப்படுகின்றது. வீட்டில் கலை மறுதலிக்கப்படுகின்ற போது வெளியே மரக்கொத்தியின் சத்தத்தை கட்டை மணியன் குடித்துவிட்டு போடும் மெட்டுக்களை ரசிக்கிறான் இக்காலத்து புதிய சிந்தனைப் போக்கு இவனிடமும் வெளிப்படுகின்றது. தான் தூக்கி வரும் நாய்க்குட்டிக்கு சாதி முறை கொடுப்பதோ என்கின்றான்.

உதாரணம் : "அரிய பெரிய பிரிவு முறைகள் நிறைய உடைய பிரிய மனிசர்கள் நாய்களுக்கும் அந்த நடப்பைக் கொடுக்கிறதோ..?" இக்காலக் கல்வி முறையில் ஆங்கில மன்னர் பற்றி வரலாறு இணைக்கப்பட்டிருந்தல் கணேசு பாத்திரம் பாடப்பரப்பொன்றை வாசிப்பதன் ஊடாகப் புலப்படுகிறது.

**விதானையார்**

காலத்திற்கேற்ப பாரம்பரிய ரீதியான நடைமுறைகள், கட்டுப்பாடுகள் கிராமிய பழக்கங்கங்களில் எங்ஙனம் தளர்வடைகின்றது என்பதையும் இருதலை நிலையில் நிற்கும் போக்கையும் இப்பாத்திரச் சித்திரிப்பு ஊடாகக் காணமுடிகின்றது. மாணிக்கத்தின் வீட்டில் கோப்பி குடிக்க நினைப்பதும் அதே கணம் பஞ்சையர் அவர்களிடம் இட்லி வாங்கி உண்டதைக் கருத்தில் கொண்டு 'உண்டலிலும் பார்க்க பருகல் உறைப்பில்லை' என்கின்றார்.

உதாரணம்: கால மாற்றத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு ஆங்கில அதிகாரியை வரவேற்கச் செய்யும் ஒழுங்குகள் இக்காலத்தில் ஏற்பட்ட மனித நடத்தையின் மாறுதலையும் புலப்படுத்துகின்றது.

**காசி**

முன்னர் கொட்டகைகளில் நடந்த கூத்துக்கள் அருகி பட்டணத்துக்கு கொட்டகைகளுக்கு நாடிச் செல்லும் நிலையினையும் கிராமத்தில் அன்றாடம் இரசித்த மாணிக்கத்தின் நாதஸ்வர இசையை நகரமண்டபத்திற்கு சென்று கேட்பதற்கு ஆவல்கொள்வதும் அங்கு தன்னை அனுமதிப்பார்களா? எனத் தயங்குவதும் ஆகிய செயற்பாடுகள், காசி என்னும் பாத்திரச் சித்திரிப்பு ஊடாக கிராமிய சமூகப் பண்பாட்டில் கலைகளுக்கு ஏற்பட்ட மாற்றத்தைப் புலப்படுத்துகின்றது.

(05 புள்ளிகள்)

iii. **'கோடை' எழுத்துருவை மையப்படுத்தி அக்கால ஏகாதிபத்திய ஆட்சி முறை மக்களின் மனப்பாங்கில் ஏற்படுத்திய பாதிப்பினை விளக்குக.**

ஏகாதிபத்திய ஆட்சியினால் குறிப்பாக, 1937 களில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பினை கோடைகாலத்தோடு உருவகிக்கின்றார். நாடகாசிரியர் வாழ்வியல் முறையில் ஏற்படும் மாற்றங்கள் மனிதர்களின் மனப்பாங்கில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதைப் புலப்படுத்துகின்றார்.

- அந்நியர் ஆட்சி ஆங்கிலக் கல்வியின் தேவையையும், அதனூடாக கிடைக்கும் வேலைவாய்ப்பையும் கொண்டுவர அது எங்ஙனம் அவர்களது சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டுவருகின்றது என்பதை செல்வத்தின் ஊடாகக் கண்டுகொள்ள முடிகின்றது. கணேசுக்குத் தொழிலை மறைப்பித்து பேனை பிடித்து பெரிதெழுதும் கிளாக்கராக்க வேண்டும் என்ற மனப்பாங்கும் முருகப்பு அரச உத்தியோகத்தில் இருப்பதால் தனது மகளிற்கு திருமணம் செய்து கொடுக்க நினைப்பதையும் அதற்காக முருகப்புவை தன் வீட்டிற்கு வலிந்து அழைக்கும் மனப்பாங்கையும் காணலாம்.

- ஏகாதிபத்திய ஆட்சியின் மாற்றங்கள் கண்டு வருந்தும் மனப்பாங்கை சோமு, பஞ்சையர், மாணிக்கம் எனும் மாந்தர்களிடம் காணலாம்.
  உதாரணம்: சிற்பி இருந்து செதுக்கி முடித்த சிலை பொற்புடைத்து கெட்டுப் பொலிவு சிதைந்தழிந்து மொட்டை உருவாய் முடமாய் நிற்கின்றது.
- ஏகாதிபத்திய அரச ஆட்சிக்குச் சார்பாக நடந்து கொண்டவர்களின் மனப்பாங்கு தங்கள் பதவியில் நிலைத்திருக்க வேண்டிய செயற்பாடுகளில் முனைபவர்களாக உள்ளனர் புதிதாக வரும் அரசாங்க அதிபரை வரவேற்கச் செய்ய ஏற்பாடுகளும் தங்கள் விருப்புக்களை விடுத்து மேலைத்தேய வாத்திய வரவேற்பை ஒழுங்கமைப்பதும் அவர்தம் மனப்பாங்கை வெளிப்படுத்துகின்றது.
- நாதஸ்வர இசையை அறியாதவர் சபையில் நிகழ்த்துவதற்கு விரும்பாத போக்கு கலைஞர்களிடம் காணப்பட்டாலும், அந்நியர் ஆட்சியினால் வருமானம் பெறும் வழிகள் அரிதான நிலையில் வரும் வாய்ப்பை விருப்பின்றி ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும் ஏற்படுகின்றது.
  உதாரணம்: ஆனியிலோ, ஆடியிலோ வந்தடைகின்ற சேவகத்தை மோடி செய்து கண்ணால் முளிசிக் கலைத்துவிட்டால் சாப்பிட வேண்டாமோ?
- கணேசு தன் கலையிலிருந்து விடுபட முடியாமலும் தாயின் விருப்பிற்கேற்ப ஆங்கிலக்கல்வியை கற்றுக் கொள்ளாத மனநிலையிலும் இடர்படும் நிலை ஆட்சிமாற்றத்தினால் இளையவர்களிடம் மாறுபட்ட மனப்போக்கை உருவாக்கின்றது.
- அந்நியர் ஆட்சியினால் விளைந்த கோடையினால் மக்களின் மனப்பாங்கில் ஒரு நம்பிக்கை எழுவதையும் காணலாம். இது இடரின்போது எழும் நேர் மனப்பாங்கின் விளைவு
  உதாரணம்: என்றோ இருந்துபார் மாணிக்கம் நின்றந்த கோயில் நிமிர்ந்து..
- பஞ்சையரிடம் காணப்படும் புதிய மனப்பாங்கு சாதியம், சமூகக் கட்டுப்பாடுகளுக்கு எதிரான சிந்தனைகள் ஏகாதிபத்திய ஆட்சியின் விளைவின் ஒரு கூறாக அமைகின்றது. ஏனெனில் விடுதலைச் சிந்தனையின் கல்விச் சிந்தனையின் வெளிப்பாடாகவே இது எழுகின்றது.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## பிரிவு B

**04. அபிக்ஞான சாகுந்தலத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, சகுந்தலை பாத்திரம் எவ்விதம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படுகிறது என்பதை விளக்குக.**

- நாடகம் மோதுகைகளுக்கூடாக வளர்த்தெடுக்கப்படுவது சாகுந்தலம் நாடகத்திலும் பல மோதுகைச் சந்தரப்பங்கள் காணப்படுகின்றன. இச்சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டுவது எதிர்பார்க்கப்படுகின்றது. உதாரணமாக , துருவாசகர் சகுந்தலையுடன் முரண்படுதல், துஸ்யந்தன் சகுந்தலையுடன் முரண்படுதல் போன்ற மோதுகைச் சந்தரப்பங்களை எடுத்துக்காட்டியிருப்பின் புள்ளிகளை வழங்கலாம்.
- அபிக்ஞான சாகுந்தலம் நாடகத்தில் சகுந்தலை பாத்திரம் தோன்றுவது தொடக்கம் நாடக இறுதி யில் துஸ்யந்தனுடன் இணைவது வரையான கட்டங்களுக்கூடாக இப்பாத்திரம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படும் முறைமையினை இந் நாடகபாடத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது.

  **உதாரணமாக:**

  ஆச்சிரமத்தில் செடிகொடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல் - இயற்கையைப் பேணுவது, இரசிப்பது.

  துசியந்தனைக் காணுதல் – காதல்

**05. 1990களுக்குப் பின்னரான ஈழத்து தமிழ் அரங்கு பரீட்சார்த்த அரங்க முயற்சிகளின் விளைபயனாக விருத்திபெற்று வந்துள்ளது என்பதனை அக்கால சமூக, அரசியல், சூழமைவு, அரங்குளின் உள்ளடக்கம், அவ்வரங்குகளின் நெறியாள்கை முறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

- ஈழத்துத்தமிழ் அரங்கில் பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ள வாய்ப்பாக இருந்த பின்னணிகள்
  - யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் பாடநெறி வளர்ச்சி
  - கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் பாடநெறியை ஆரம்பித்தமை
  - அரங்குசார் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களின் தோற்றமும் வளர்ச்சியும்.

- போர்சூழல் நிலமையானது அரங்கை ஓர் இடத்தில் இருந்து நின்று, நிதானித்து செயற்படமுடியாத நிலமையை ஏற்படுத்திற்று
- விரைவும் ,வேகமும், கற்பனையும் , அரங்கின் தேவையும், பரீட்சார்த்த அரங்க முறைமையை வலிமையாக செயற்படத் தூண்டியமை.
- அரங்கின் உள்ளடக்கங்கள் இனப்பிரச்சினைகள், பெண் நிலைசார்ந்த சிந்தனைகள் சமூகப்பொருளாதார பண்பாட்டு இருப்பியல் நிலைமைகளைப் பேசின.
- புதிதளித்தல் நுட்பமும், பட்டறைச் சூழலும் எந்த வெளியையும் நெருக்கடி நிலைமைக்கான அரங்கியலாக்கிய முறைமை.
- பரம்பரிய அரங்க முறைமையாலும் புத்துருவாக்க முறைமை உள்வாங்கபடலாயிற்று அரங்கு புதிய தேடல்களை நோக்கி பயணிக்க தொடங்கின.

(இவைகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கியிருப்பின் புள்ளிகளை வழங்குக)
(15 புள்ளிகள்)

**06. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக**

i. **கட்டியக்காரன்**

- பொதுவாக கூத்தின் அரசர் வரவை அறிவிக்க வரும் பாத்திரமே கட்டியக்காரன்.
- சில கூத்துக்களில் ஒவ்வொரு அரசர் வரவிற்கும் கட்டியக்காரன் தோன்றி கட்டியம் கூறுவது உண்டு
- கையில் பிரம்புடன் காலில் சதங்கை அணிந்து மார்பில் பூநூல் அணிந்து வருபவர்
- ஆற்றுவோரையும் , பார்ப்போரையும் கூத்துச் சூழலுக்கு இழுத்துச் செல்பவர்.
- காட்சிப் பின்புலத்தை எடுத்துக் கூறுபவர்.

(இவை போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்)
(05 புள்ளிகள்)

ii. **மகிடிக் கூத்து**

- மகிடி என்பது மந்திர தந்திர விளையாட்டுக்களைக் குறிக்கும் .
- மகிடிக் கூத்துக்கள் மூதூர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, ~~வவுனியா~~ ஆகிய பிரதேசங்களில் ஆடப்படுகின்றன.
- மட்டக்களப்பில் 3 வகை மகிடிக் கூத்துக்கள் காணப்படுகின்றன.

- நிலையாக இருந்தவருக்கும் வேறிடத்தில் இருந்து வந்தவருக்கும் நடக்கும் போட்டியே மகிடிக்கூத்தின் கருவாக இருக்கின்றது. மட்டக்களப்பு மகிடிக் கூத்தில் பிராமணர் ,முஸ்லிம், பிராமணர் – கத்தோலிக்கர் பாட்டியும் இடம் பெறுகின்றன.

- மகிடியில் வரும் பாத்திரங்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப தாமாகவே தமக்குள் கற்பனை செய்து மக்களுடனும் பார்ப்போருடனும் உரையாடிக் கொள்வர்.

- விரசமான பகிடிகளும் மகிழ்ச்சிகளும் பெரும் சிரிப்பை விளைவிக்கும் உரையாடல்களும் நிகழ்வுகளும் இவற்றில் உண்டு.

(இவை போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்)

(05 புள்ளிகள்)

iii. **சொக்கரி**

- சிங்களப் பாரம்பரிய நாட்டார் ஆற்றுகை வடிவம்.

- சிங்கள வருடப்பிறப்பை ஒட்டியதாக நிகழ்த்தப்பெறும்.

- பத்தினித் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது.

- தொன்மக் கதையை அடிப்படையாகக் கொண்டது.

- குருகாமி, சொக்கரி, வைத்தியர், பச்சி, மீறா போன்ற பாத்திரங்கள் இடம்பெறும்.

- வயல்வெளி களத்து மேட்டில் நிகழ்த்தப்படும்.

- பாத்திரங்களை பொத்தேகுரு அறிமுகம் செய்வார்.

(05 புள்ளிகள்)

iv. **பீஜிங் ஒபேறா**

- சீனாவின் செந்நெறிப்படுத்தப்பட்ட அரங்க வடிவங்களுள் ஒன்று.

- பாடல், ஆடல், உரையாடல், சேர்க்கஸ், ஊமம் ஆகிய அம்சங்களை தனித்துவமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றது.

- ஆரம்பகாலத்தில் பாரம்பரிய வரலாற்றுக்கதைகள் நிகழ்த்தப்பட்டு பின்னர் போர் சம்பந்தமாகவும் சமூகப் பிரச்சினை சம்மந்தமாகவும் சீனப் புரட்சி சம்பந்தமாகவும் எடுத்துக் கூறின.

50